Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 09

வெள்ளிக்கிழமை
05 டிசெம்பர் 2025

கார்த்திகை 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## டித்வாவுக்குப் பின் 215 மண்சரிவுகள்!

யாழ்ப்பாணம், டிசெ. 5
இலங்கையை டித்வா புயல் தாக்கிய பின்னர், 215 மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் அந்தத்

»11

## ஆட்சியைக் கவிழ்க்கோம்

கூறுகின்றது எதிர்க்கட்சி

விரிவு பக்கம்:-11

### வெள்ளப்பாதிப்பு வீடுகளைத் தூய்மையாக்க

# யாழ்ப்பாணத்துக்கு ரூ.36 கோடி; நிவாரணநிதியில் குளறுபடி?

### பாதிப்பை உயர்த்திக்காட்டி மோசடிக்கு முயற்சியா? பொதுமக்களிடையே பெரும் எதிர்ப்பலை

யாழ்ப்பாணம், டிசெம்பர் 5

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்வதற்காக அரசாங்கத்தால் நிதி வழங்கப்படும் நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பாதிப்புற்றோரின் எண்ணிக்கையை பலமடங்கு உயர்த்திக்காட்டி பெருந்தொகை நிதி பெறப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


»11

## சர்வதேச உதவிகளுக்காக நன்கொடையாளர் மாநாடு!

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 5
பேரிடரில் இருந்து இலங்கையை மீட்பதற்காக, சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை நடத்துமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி

»11



மாவட்டச் செயலகம் – யாழ்ப்பாணம்
DISTRICT SECRETARIAT – JAFFNA

## கரவெட்டியில் மட்டும் ஏன் பாதிப்புக் குறைவு?

### மாவட்டச் செயலர் வினோதக் கடிதம் எண்ணிக்கையை உயர்த்த முயற்சியா?

யாழ்ப்பாணம், டிசெ. 5
வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில் கரவெட்டியில் இருந்து குறைந்தளவு எண்ணிக்கை வழங்கப்பட்ட நிலையில், மாவட்டச் செயலர் அதுதொடர்பில் விளக்கம்கோரி பாதிப்பு எண்ணிக்கையை அதிகரிக்க முனைந்துள்ளார் என குற்றஞ்சாட்டப்

»11



## நாயாற்றுப் பாலத்தில் புனரமைப்புத் தீவிரம்!

முல்லைத்தீவு, டிசெ. 4
வெள்ளத்தால் சேதமடைந்த முல்லைத்தீவு நாயாற்றுப் பாலத்தைப் புனரமைக்கும் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

»11

## பிரதேசசபை உறுப்பினர் துஷ்யந்தன் உயிரிழப்பு!



யாழ்ப்பாணம், டிசெ. 5
தமிழ் மக்கள் கூட்டணியின், வலிகாமம் கிழக்கு பிரதேசசபை உறுப்பினரான பரமசிவம் துஸ்யந்தன் (வயது-43) நேற்று உயிரிழந்தார்.

»11

### டித்வா புயலால்

## சிறுவர்களுக்கு உளப் பாதிப்பு!

### துறைசார் மருத்துவ நிபுணர் தர்ஷனி ஹெட்டியாராச்சி தகவல்

விரிவு பக்கம்:-11

## பேரிடர் மீட்சிக்காக 50 பில்லியன் ரூபா

### குறை நிரப்புப் பிரேரணை நாடாளுமன்றில் முன்வைப்பு

கொழும்பு, டிசெ. 5
இலங்கையில்ஏற்பட்டுள்ள பேரிடர் அழிவுகளிலிருந்து மீள்வதற்கான நிதியாக, 50 பில்லியன் ரூபாவை மதிப்பிட்டு குறைநிரப்பு மதிப்பீட்டு பிரேரணையாக நாடாளுமன்றத்தில் முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்

»11

முச்சந்தி முரளி





### திஸ்ஸ விகாரை எதிர்ப்புப் போராட்டத்தில்

## பொதுமக்களின் கூடாரங்களை கிழித்து எறிந்தனர் பொலிஸார்

### அந்தப் பகுதியில் பெரும் பதற்றம்!



யாழ்., டிசெ. 5
யாழ்ப்பாணம் தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரியும், திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணிகளைக் காணி உரிமையாளர்

»11

## 5 பவுண் நகைகள் நுணாவிலில் திருட்டு

### விசாரணைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 5
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் 5 பவுண் நகைகள் நேற்று அதிகாலை திருடப்பட்டுள்ளன.

»11

## ஒருபுறம் உதவிகள் மறுபுறம் அத்துமீறல்

### இந்திய மீனவர்கள் மீது வடமராட்சி மீனவர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 5
டித்வா புயலால் ஏற்பட்ட பேரழிவுகளில் இருந்து இலங்கை மீள்வதற்காக இந்தியா உதவிவரும் நிலையில், மறுபுறம் இந்திய மீனவர்களின் அத்து

»11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 04.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4275 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 23 31 67 77 |
| விசேட எழுத்து | C |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 04.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1342 |
| வெற்றி இலக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 23 24 42 52 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 04.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | |
| ஆங்கில எழுத்து | |
| வெற்றி இலக்கங்கள் | |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 04.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2381 |
| ஆங்கில எழுத்து | K |
| சுப்பர் இலக்கம் | 21 |
| வெற்றி இலக்கங்கள் | 01 52 65 67 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 04.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6033 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 3 9 9 1 2 4 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 04.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2063 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 28 33 51 69 |
| விசேட எழுத்து | F |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 04.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0149 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 21 38 44 |

# அரசாங்கம் செய்பவற்றை சட்டப்படி செய்யவேண்டும்

## ஹர்ஷ டி சில்வா வலியுறுத்து



**கொழும்பு, டிசெ.5**

**இலங்கையை மீளக்கட்டியெழுப்பல் நிதியம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அரச பொது நிதிச்சட்டத்தின் 148ஆவது பிரிவின்படி நாடாளு மன்றத்தின் அனுமதி இல்லாமல் பொது நிதியம் ஒன்றை உருவாக்க முடியாது. செய்வதை சட்டத் தின் பிரகாரம் செய்யுங்கள் என்று ஐக்கிய மக் கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா அரசாங்கத்தை வலியுறுத்தினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடை பெற்ற வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் உரை யாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- 2025ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் செலவி னங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி செலவழிக்கப்படவில்லை. அந்த நிதியை தற்போதைய அவசர நிலைக்கு பயன்ப டுத்தமுடியும். சேதடைந்துள்ள வீடுகள் மற்றும் பாலங்களைப் புனரமைக்க 30 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 20 பில்லியன் ரூபாவை பிறி தொரு வழியில் பெற்றுக் கொள்ளலாம். எதிர்வரும் 4 வாரத்துக்கு செலவு செய்வ தற்கு போதுமான நிதி அரசாங் கத்திடம் உள்ளது.

நிதி விடுவிப்புக்குத் தேவை யான சுற்றறிக்கைகளைத்தயா ரிப்பதற்கு அரசாங்கத்துக்கு எவ்வித தடையும் கிடையாது. பாதிக்கப்பட்டுள்ள வீடுகளைத் துப்பரவுசெய்வதற்குக் குறைந் தபட்சம் 50 ஆயிரம் ரூபாவே னும் வழங்கமுடியும். 25 ஆயி ரம் வழங்கப்படும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது. 2026ஆம் ஆண்டு தான் நிதி நெருக்கடி ஏற்படும். நாணய நிதியத்தின் பரிந்துரைக்கு அமைய அரச செலவினங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

தற்போதைய நெருக்கடியான நிலைமையை கருத்திற் கொண்டு அரசசெலவினத்தை 300 முதல் 500 பில்லியன் ரூபா வரையில் அதிகரித்துக் கொள்ளும் யோசனையை அர சாங்கம் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவந்தால் முழுமை யான ஒத்துழைப்பு வழங்கு வோம்-என்றார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 04.12.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0741 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கம் | 5 8 1 7 7 0 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 04.12.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3007 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கம் | 32 45 60 79 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 04.12.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 27 44 53 72 |
| வெற்றி வாரம் | 5168 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 04.12.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0837 |
| வெற்றி இலக்கம் | 09 12 30 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 04.12.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| விருச்சிகம் | |
| வெற்றி இலக்கம் | 10 11 25 61 |
| சீட்டிழுப்பு வாரம் | 4719 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 04.12.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | E |
| சுப்பர் இலக்கம் | 11 |
| வெற்றி இலக்கம் | 32 40 57 59 |
| வெற்றி வாரம் | 2183 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 04.12.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கம் | 09 41 50 74 |
| வெற்றி வாரம் | 2833 |

## உலக உணவுத் திட்டத்தால் உதவிப்பொருள் கையளிப்பு

கொழும்பு, டிசெ.5

ஐக்கிய நாடுகள் முகவரமைப்பான உலக உணவுத்திட்டத்தால் அமெரிக்க நிதியுதவியின் ஊடாகக் கொள்வனவு செய்யப்பட்ட அத்தியாவசியமான நிவார ணப்பொருள்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் இடர் முகாமைத்துவப்பிரிவி டம் கையளிக்கப்பட்டுள்ளன.

பெரும் இயற்கைப் பேரிடருக்கு முகங்கொ டுத்திருக்கும் இலங்கை மக்களுக்கு அவ சியமான உடனடி நிவாரண உதவிகளுக் குப் பங்களிப்புச்செய்யும்வகையில் உள் நாட்டு முகவரமைப்புகள் ஊடாக 2 மில்லி யன் டொலர் நிதியுதவி வழங்கப்படும் என்று அமெரிக்கா ஏற்கனவே அறிவித்தி ருந்தது.

அந்த நிதியின் ஊடாகக் கொள்வனவு செய்யப்பட்ட சமையல் உபகரணங்கள், குடிநீர்த் தாங்கிகள், டீசல் ஜெனரேட்டர் கள், கூடாரங்கள் உள்ளிட்ட அத்தியாவ சிய உடனடி நிவாரணப்பொருள்களை பாதுகாப்பு அமைச்சின்கீழ் இயங்கும் இடர் முகாமைத்துவப்பிரிவிடம் கையளிக்கப் பட்டுள்ளன என்று கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் முகவர மைப்பான உலக உணவுத்திட்டம் தெரி வித்துள்ளது. (எ-இ)



## உயிரிழந்த விமானிக்கு முதுகலைப்பட்டம் கையளிப்பு

கொழும்பு, டிசெ.5

லுணுவில ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்த விமானி யான விங் கமாண்டர் நிர்மல சியம்பலாபிட்டியவின் பட்டச்சான் றிதழ் கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தரால் கையளிக் கப்பட்டுள்ளது. அண்மையில் லுணுவில பகுதியில் நிவாரணப் பணிக்காகச் சென்றிருந்த ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளாகி யிருந்தது. இதில் விமானியாக இருந்த விங் கமாண்டர் நிர்மல சியம்பலாபிட்டிய உயிரிழந்தார். சம்பவத்தில் உயிரிழந்த விமானி கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது முதுகலைப் பட்டத்தை வெற்றிகரமாக முடித்திருந்தார். அண்மையில் பட்ட மளிப்பு விழா நடைபெறவிருந்தபோதிலும், நாட்டின் சூழ்நிலை காரணமாக நடத்தப்படவில்லை. அவருடைய உடல் இறுதி அஞ்சலிக்காக அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள நிலை யில் நேற்றுமுன்தினம் பட்டமளிப்பு விழா நடைபெற்றபோது அவருடைய பட்டம் கையளிக்கப்பட்டுள்ளது. இதேவேளை உயிரிழந்த விமானியின் சேவைகளைப் பாராட்டும் வகையில் அவருக்கு பதவி உயர்வும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## இலங்கைக்குக் கப்பலை கையளித்த அமெரிக்கா

கொழும்பு, டிசெ.5

அமெரிக்கக் கடற்பாதுகாப்புப் படையின் சேவையில் இருந்த மேலும் ஒரு கப்பல் இலங்கைக் கடற்படைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை இலங்கைக்குக் கையளிக் கப்பட்ட நான்காவது கப்பல் இதுவாகும் என அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவேற்றியுள்ள பதிவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

'டித்வா' புயலுக்கான அவசர நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்றுவரும் இந்த நேரத்தில், கடல் வழித்தடங்கள் மற்றும் கடற்படை ஒத்துழைப்பின் முக்கியத்துவம் மீண் டும் நினைவூட்டப்படுகிறது.

புதிய கப்பல் இலங்கைக் கடற்படைக்கு ஒப்படைக்கப்படு வது, இரு நாடுகளுக்கிடையேயான கடற்படைக் கூட்டுறவில் ஒரு முக்கியமான முன்னேற்றமாகும். கப்பல் இலங்கைக் கடற்பரப்பை அடைவதற்கு இன்னும் சில மாதங்கள் எடுக்கும். இந்தக் கப்பல் எதிர்காலத்தில் போதைப்பொருள் கடத்தல், கடல் வழிக் கடத்தல், மற்றும் கடற்பரப்பில் அவசரத் தேடல்-மீட்பு நடவடிக்கைகள் போன்றவற்றுக்கு இலங்கை மேற்கொள்ளும் முயற்சி களை வலுப்படுத்தும் என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 'டித்வா' புயல் பாதிப்பு

# வடக்கு மாகாணத்துக்கு ரூ. 1872 மில். ஒதுக்கீடு


**கொழும்பு, டிசெ. 5**

**'டித்வா' புயல் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்துக்கு சுமார் 1872 மில்லியன் ரூபா அனர்த்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் அநுரகுமார திஸாநாயக்க பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளக் கட்டியமைப்பதற்கு அனர்த்த நிவாரணப்பணிக்காக சுமார் 10 ஆயிரத்து 290 மில்லியன் ரூபாவை முதற்கட்டமாக முழு நாட்டுக்கும் ஒதுக்கியுள்ளார்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் அதிக பாதிப்புக்கு உள்ளான மன்னார் மாவட்டத்துக்கு விசேடமாக 954 மில்லியன் ரூபாவும், யாழ். மாவட்டத்துக்கு 365 மில்லியன் ரூபாவும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு 206 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 189 மில்லியன் ரூபாவும் மற்றும் வவுனியா மாவட்டத்துக்கு 158 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்ட நிதிகள் சகல மாவட்டச் செயலாளர்களின் கண்காணிப்பில் பாதிப்புக்கு உள்ளான தரவுகளின் அடிப்படையில் பிரதேச செயலகங்கள் ரீதியாகப் பங்கீட்டு வழங்கப்படும். ஏனைய மாவட்டங்களின் பாதிப்பு மற்றும் தேவைப்பாடுகளின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது - என்றார். (ச)



# பங்களாதேஷ் கைகொடுப்பு!

கொழும்பு, டிசெ. 5

சீரற்ற வானிலையால் இலங்கையில் ஏற்பட்ட பேரழிவைத் தொடர்ந்து மீட்புப் பணிகளை வலுப்படுத்துவதற்காக பங்களாதேஷ் மனிதாபிமான நிவாரணப்பொருள்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளது.

அந்நாட்டு விமானப்படையின் சி-130 விமானத்தில் நிவாரணப் பொருள்கள் நேற்றுமுன்தினம் கொண்டுவரப்பட்டன. இந்தச் சவாலான காலகட்டத்தில் இலங்கையுடனான பங்களாதேஷின் தொடர்ச்சியான ஒற்றுமையை அடிக்கோடிட்டுக் காட்டும்வகையில் இந்தப் பொருள்கள் ஒப்படைக்கப்பட்டன. (ச-இ)

## நிவாரணப்பணிகளுக்கு

# ஆசிய அபிவிருத்தி வங்கியால் 3 மில்லியன் டொலர் மானியம்

கொழும்பு, டிசெ. 5

'டித்வா' புயல் ஏற்படுத்திய பேரழிவை அடுத்து இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் நிவாரண நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 3 மில்லியன் அமெரிக்க டொலர் அனர்த்த நிவாரண மானியத்துக்கு அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன், சீரற்ற வானிலையினால் பாதிக்கப்பட்ட தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுக்கும் தலா 2 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி அங்கீகரித்துள்ளது.

இந்த மானியங்கள் அவசரகால மற்றும் மனிதாபிமான முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




# இ.போ.ச. சேவைகள் 1,500 இரத்து!

கொழும்பு, டிசெ. 5

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட இடர்நிலைமை காரணமாக சாலைத்தடைகளால் இலங்கைப் போக்குவரத்துச்சபையால் இயக்கப்படும் சுமார் 1,500 பேருந்துச் சேவைகள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன. இரத்துச்செய்யப்பட்ட இந்தப் பேருந்துகளில் சுமார் 15 ஆயிரம் பயணிகள் முன்னதாக ஆசனங்களை முன்பதிவு செய்திருந்தனர். அவர்கள் மாற்றுத்திகதியை பெற்றுக்கொள்ள 1315 என்ற அவசர தொலைபேசி இலக்கம் அல்லது 070 3110 506 ஊடாகத் தொடர்புகொள்ளலாம். தற்போது நுவரெலியா, நாவலப்பிட்டி, யாழ்ப்பாணத்துக்கான 87ஆம் இலக்கப்பாதை, வலப்பனை, மூதூர் போன்ற இடங்களுக்கான பேருந்துச் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இருப்பினும், ஏனைய இடங்களுக்கான சேவைகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# கைத்தொழில்கள் பாதிப்பு 16க்கு முன் அறிவிக்குக

கொழும்பு, டிசெ. 5

'டித்வா' புயல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள கைத்தொழில்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் பொறிமுறையொன்றை கைத்தொழில் அமைச்சு ஆரம்பித்துள்ளது.

அதற்கமைய, பாதிக்கப்பட்ட கைத்தொழில்கள் குறித்து அறிவிப்பதற்காக '0712666660' எனும் தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தரவுகளைச் சமர்ப்பித்தலை இம்மாதம் 16ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு முன்னர் மேற்கொள்ளவேண்டும் என்பதுடன், www.industry.gov.lk அல்லது https://aid.floodsupport.org/businessimpact ஆகிய இணையத்தளங்கள் ஊடாகத் தகவல்களை உள்ளிடமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆத்தில போற தண்ணிதானே...!

**தெ**ன்னையில தேள் கொட்டினதுக்கு பனையில நெறிபோட்ட கதைமாதிரிப் போய்க்கொண்டிருக்குது வெள்ள நிவாரண வேலையள். பாதிப்பு எங்கேயோ இருக்க வெள்ளம் எட்டிப்பார்த்த இடங்களுக்கெல்லாம் இப்ப நிவாரணமழை கொட்டிக்கொண்டிருக்குது. வெள்ளத்தால பாதிக்கப்பட்ட வீடுகளைக் கிளீன் பண்றதுக்கு, ஒவ்வொரு வீட்டுக்கும் 25 ஆயிரம் ரூபா குடுக்கிறதெண்டு அரசாங்கம் அறிவிச்சதெல்லோ. உண்மையில இந்தப் புயலாலையும், மழையாலையும் மற்ற இடங்களைவிடவும் யாழ்ப்பாணத்தில ஒப்பீட்டளவில பாதிப்புக் குறைவுதான். கனக்க இடங்களில முழங்காலளவுக்கு வெள்ளம் நிண்டதுதான், சில இடங்களில கொஞ்ச வீடுகளுக்குள்ள வெள்ளம் போனது. அதைத்தவிர கொஞ்ச மரங்கள் பாறி விழுந்தது. சனங்கள் வெள்ளம் வீட்டுக்க வந்திடும் எண்ட பயத்தில இடம்பெயர்ந்தவை. அதைத்தவிர மூண்டு பேர் செத்தவை. உண்மையைச் சொல்லோணும் எண்டா போனவருசம் மாரிகாலத்தைவிட இந்தமுறை யாழ்ப்பாணத்தில பாதிப்புக் குறைவெண்டுதான் சொல்லோணும். மன்னாரைப் போலவோ முல்லைத் தீவைப் போலவோ மலையகத்தைப் போலவோ இஞ்ச வீடுகள் வெள்ளத்தில அடிபட்டுப் போகேலை, ஆக்கள் கும்பல் கும்பலா மண்சரிவுக்குச் சிக்குப்பட்டு நூற்றுக்கணக்கில சாகவும் இல்லை.

ஆனால் இப்ப என்னவெண்டால் வெள்ளத்தால பாதிக்கப்பட்ட வீடுகளைக் கிளீன் பண்ணுறதுக்கு 36 கோடி ரூபாவுக்கும் மேல யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்காம். 14 ஆயிரத்து 459 வீடுகள் வெள்ளத்தால அள்ளுண்டு போனதெண்டு ரிப்போர்ட் அனுப்பி, இவ்வளவு காசு கச்சேரிக்கு அனுப்புப்பட்டிருக்கு. அதிலையும் சங்கானைப் பிரதேச செயலகத்திலதான் பாதிப்புக்கூடவாம். 2, 851 வீடுகளுக்கு அங்க பாதிப்பு எண்டு ரிப்போர்ட் குடுத்திருக்கினம். அதைவிட நெடுந்தீவில 1,216 வீடுகளுக்குப் பாதிப்பாம். உந்தக் கணக்கின்படி பார்த்தால், முழுநெடுந்தீவுமே வெள்ளத்தால மூடுப்பட்டிருக்கோணுமெல்லோ. இந்த விசயத்தில கரவெட்டியில மட்டும் 30 வீடுகளுக்குத்தான் பாதிப்பு எண்டு உண்மையான கணக்குக் குடுபட்டிருக்கு, மற்ற இடங்களிலையெல்லாம் 'ஆத்தில போற தண்ணிதானே அண்ணை குடி தம்பி குடி' எண்ட கணக்கா, அரசாங்கம் தாற காசு தானே எண்டு கண்ணை மூடிக்கொண்டு கணக்குக்காட்டி, காசு எடுத்திருக்கினம் எண்டு பச்சையாவே விளங்குது. என்னதான் அரசாங்கம் குடுக்கிற காசெண்டாலும், மலையகத்திலையும் மற்ற இடங்களிலையும் சனங்கள் உயிரையும், வாழ்க்கையையும் , வாழ்வாதாரத்தையும் துலைச்சுப்போட்டு அந்தரப்பட்டுக்கொண்டு நிக்கேக்க, இப்பிடி வெள்ளம் சும்மா வீட்டுக்க எட்டிப்பார்த்ததுக்கெல்லாம் இருபத்தையாயிரம் நிவாரணத்தை வாங்கிறதெண்டது மனச்சாட்சிக்கே அடுக்காத வேலை. இஞ்ச உண்மையிலேயே கடுமையாப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மட்டும் இந்த நிவாரணக்காசைக் குடுத்திட்டு, மிச்சக்காசை மலையகத்துக்கோ, மன்னாருக்கோ குடுத்தால் அதுகளின்ர வாழ்க்கையில பெரிய உதவியா இருக்கும்.

இப்பிடிக் கண்டபடி கணக்குக் காட்டினதுக்குப் பின்னால அந்தந்த ஏரியாவுக்குப் பொறுப்பான திசைகாட்டிக்காரர் தான் இருக்கினமாம். அவையள் உந்த நிவாரணக் காசை தாங்கள் தந்தமாதிரி ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலையும் குடும்பங்களைக் கூப்பிட்டுக் குடுக்கப் போயினம். நிவாரணக்காசைக் குடுத்து அவையின்ர வாக்குகளை வளைக்கிறதுக்குத்தான் உந்தக் கள்ள வெள்ளக்கணக்காம். ஊழலுக்கு எதிர் எண்டு சொல்லிக்கொண்டு இப்பிடி வெள்ள நிவாரணத்திலையே ஊழல் செய்யிறவை எதுக்கு வெள்ளையும் சொள்ளையுமா திரியோணும்?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 18 . 02 . 1948



இறப்பு 02 . 12 . 2025

## அழகராசா உமாதேவி

மறவன்புலோ மத்தியைப் பிறப்பிடமாகவும் மறவன்புலோ மேற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட அழகராசா உமாதேவி அவர்கள் 02.12.2025 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமநாதர் - மனோன்மணி தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபை - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அழகராசாவின் அன்பு மனைவியும், சபேசினி, சாந்தினி (கனடா), சாந்தன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்மராசா, சதானந்தன் (கனடா), சோபனா (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், மகேஸ்வரன், இரத்தினகாந்தி, கணேஸ்வரன் (சுவிஸ்), காலஞ்சென்ற குமரேஸ்வரன் மற்றும் ஜெயமளாதேவி, கருணாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, தர்மலிங்கம் மற்றும் பறுவதம், நடராசா, காலஞ்சென்ற கந்தையா ஆகியோரின் அன்பு மைத்துனியும், தரணிகாந், தஹ்சாயி, தேனுகாந், சுமிஹா - இறையோன் (கனடா), சுருதிஹா (கனடா), சஹானா (கனடா), சாந்தமகிழ்வாமி (சுவிஸ்), சாஸ்வதன் (சுவிஸ்), சபீனா (சுவிஸ்) ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2025) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக தனிப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கலையாபரணன் கோட்டை வீதி,
மறவன்புலோ மேற்கு,
சாவகச்சேரி

தகவல் : குடும்பத்தினர்
077 929 5969, 077 326 4197

(CS 60085) E

# 10ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 23 . 10 . 1948



ஆண்டவன் அடியில் 27 . 11 . 2015

## அமரர் செல்லையா கந்தசாமி

(ஓய்வுநிலை அதிபர் - SLPS-I)

திதி - அபரபக்கப் பிரதமை

அன்பாலும் பண்பாலும் கனிவான மொழியாலும்
ஆசிரியர் மாணவரை வழிநடத்தும் பெருந்தகையே
அழகான புன்முறுவல் அமைதியான முகத்தோற்றம்
அணுவளவும் மற்றவர்க்கு கேடுநினையாத மனம்
அனைவரையும் சாந்தப்படுத்தும் ஆறுதல் வார்த்தைகள்
ஆண்டவன் திருவடியில் அடைக்கலம் ஆனதென்ன
அன்புக் கணவனாய் ஆருயிர் அப்பாவாய் கனிவான பேரனாய்
அன்புத் தெய்வமே உங்களோடு உறவாடிய உள்ளங்கள்
ஆண்டு பத்தானாலும் உங்களைத்தேடி அலைபாயுதே
ஆழமான எம் மன உணர்வைத் தாங்கி வரும் இந்த
அஞ்சலிக் கவிதை உங்களுக்கு அர்ச்சனைப் பூக்களாகட்டும்.

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

புலோலி மத்தி,
பருத்தித்துறை.

(CS/30505) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 29.10.1973 — மறைவு 04.12.2025

## மகேஸ்வரன் மதீதரன் (மதீன்)

(உரிமையாளர் - Media Electro Mart, Mahesh & Son - Chavakachcheri)

சரசாலை வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரன் மதீதரன் (மதீன்) அவர்கள் நேற்று (04.12.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரன் (Jaffna Elecricals) - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தர்மலிங்கம் - வனிதா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவதாரணியின் அன்புக் கணவரும், அட்சயன், அஸ்வித்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற மதிசன், யசோதினி (USA), சாமினி (UK), முகுந்தன் (Jaffna Elecricals) ஆகியோரின் அன்புச் சகோதரனும், குமுதினி (India), வித்தியசங்கர் (USA), நிசாந்தன் (UK), வேதகி (Colombo), தர்மினி (UK), சிவகாமி (UK) ஆகியோரின் மைத்துனரும், அபூர்வன் (UK), ஆதித்தியா, அபிநயன், ஆதவி (India) ஆகியோரின் சிறியதந்தையும், அபிராம், ஆதன்யா (Colombo) ஆகியோரின் பெரியதந்தையும், சௌமியா, துளசிந்தன் (USA), அயிறா, நிலன் (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளைமறுதினம் (07.11.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணிதொடக்கம் அஞ்சலிக்காக மகிந்த மலர்சாலை கல்கிசை (Mount Lavinia) வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் பிற்பகல் 01.00 மணிக்கு நடைபெற்று பிற்பகல் 02.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
தாய்
சகோதரர்கள் - 077 773 8715
மனைவி - 077 665 1814
பிள்ளைகள்

(CS/46634) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

பணம் ஒரு அத்தியாவசியப்பொருள் ஆனால் மனித உழைப்பிற்கு முன்னால் அது கீழ்த்தரம் உடையது.

சாமெர்செட் மகம்

## இந்தவேளையிலும் ஆதாய அரசியலா?


இலங்கையைத் தாக்கிய இயற்கைப் பேரிடரால் உருவான அதிர்ச்சியில் இருந்து நாடு இன்னும் மீள வில்லை. உயிரிழப்புகள், மண்ணுக்குள் மூடுண்டும், வெள்ளத்தில் அடிபட்டும் காணாமற்போனவர்கள், வீடுகளையும் வாழ்வாதாரத்தையும் இழந்து நடுத்தெருவில் நிற்கும் அவலம் என நாடு முழுவதும் துயரமேநிறைந்திருக்கிறது. இன்னும் பல இடங்களில் மீட்புப்பணிகள் நடைபெற்றுவருகின்றன; பாதிக் கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகளை அளிக்க தன்னார்வலர்கள் ஆயிரக்கணக்கில் முன்வந்துள்ள னர். பள்ளிகள், கோவில்கள்,தேவாலயங்கள், சமூக அமைப்புகள், புலம்பெயரிகள் என அனைவரும் ஒரே நோக்குடன் -மக்களை மீட்பது என்பதற்காக - கைகோர்த்துள்ளனர்.

ஆனால், கவலைதரும்வகையில் நாட்டின் அரசி யல் களத்தில் இதற்குப் பூரணமாக எதிர்மாறான ஓர் நிலை உருவாகிக் காண்டிருக்கிறது. பேரிடர் நிலைமை இன்னும் கட்டுக்குள் வராத இந்தக் காலக்கட்டத்தில் கூட, சில அரசியற்கட்சிகள் தங்கள் சொந்த அரசி யல் இலாப, நட்டங்களைப் பற்றிக் கணக்குப் பார்த்து செயற்படுகின்றனவோ என்ற சந்தேகம் மேலெழு கின்றது. இந்தப் பேரிடரைத் தம் அரசியல் எதிரி களைச் சாடும் வாய்ப்பாக மாற்றமுடியுமா? அரசாங் கத்தின்மீதான மக்களின் பார்வையை மாற்றிவிட முடியுமா? அல்லது ஆளுந்தரப்பின் செயலிழப்பை பெரிதாக்கிப் பிரசாரம் செய்யமுடியுமா? என்ற நிலைப்பாடுகளே அண்மைக்காலமாக அரசியற் கட்சிகளின் உரையாடல்களில் அதிகமாக வெளிப் படத் தொடங்கியுள்ளன.

இத்தகைய அணுகுமுறை ஒரு பொறுப்புள்ள அரசியல் கலாசாரமாக அமையமுடியாது. இத்தகைய அசாதாரண துன்பங்களின் காலத்தில், அரசியல் குழப்பத்தை உருவாக்குவது, மக்களின் துயரத்தை அரசியல் தந்திரங்களுக்கு ஆயுதமாக மாற்றுவது என்பவை செய்யக்கூடிய செயல்களல்ல. நாட்டின் வரலாற்றில் பலமுறை இதே காட்சியே நாம் கண்டிருக்கிறோம். பேரழிவுகள், பொருளாதார நெருக்கடிகள், தேசிய பாதுகாப்புப் பிரச்சினைகள் போன்ற எந்தப் பெரிய அவலங்களையும், அரசியல் இலாபம் தேடும் சில தரப்புகள் பயன்படுத்தியிருக் கின்றன. நாட்டில் எழும் பிரச்சினைகளை பெரிதாக எரியவிட்டு அதில் குளிர்காய்வதே அத்தகைய சில அரசியல்வாதிகளின் உத்தியாகவும் இருந்துவருகின் றது. இத்தகைய செயல்முறைகள் காரணமாக மக் களின் அரசியலின் மீதான நம்பிக்கை குறைந்து, சமூகத்தில் பிளவுகள் உருவாகி, நீண்டகால வளர்ச் சிக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளன. இந்த அரசியல் கலா சாரம் இனித் தொடர அனுமதிக்கக்கூடாது என்பது அனைவரதும் அவா.

இன்றுநாட்டுக்கு முதன்மையாகத் தேவையானது ஒன்றிணைந்த செயல்,மக்கள் உயிர்களைப் பாதுகாக் கும் விரைவான முடிவுகள், மீள்கட்டமைப்புப் பணி களுக்கான ஒருங்கிணைந்த தேசிய அணுகுமுறை ஆகியவையே. இந்த நேரத்தில் அரசியலின் சர்ச்சை கள், குற்றச்சாட்டுகள், பரப்புரைப் போராட்டங்கள் போன்றவை முற்றிலும் தேவையற்றவை. ஆளுந் தரப்போ, எதிர்க்கட்சிகளோ -யாராக இருந்தாலும் - இப்போது மக்களை நோக்கியே செயற்படவேண் டும். கடந்தகாலங்களில் உருவான அரசியல் கலா சாரத்தை இனியும் தொடரக்கூடாது. நாடு சிதைவுற் றிருக்கும் இந்தக் காலத்தில் அரசியலை ஒதுக்கி மனித நேயம் மற்றும் பொறுப்புணர்வை முன்னிலைப் படுத்துவது மட்டுமே இலங்கையை மீண்டும் நிலை நிறுத்தும் பாதையாக இருக்கும். இந்த உண்மையை அனைவரும் உணரவேண்டும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


## வவுனியாவில் 114 குளங்கள் கடும் மழையால் உடைப்பு!



வவுனியா, டிசெ. 5

வவுனியாவில் பெய்து வந்த கடும் மழை மற்றும் புயல் காரணமாக 114 குளங்கள் உடைப்பெடுத்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பெய்த மழை மற்றும் புயலின் தாக்கத்தின் காரணமாக தாழ்நிலப் பிரதேசங்களில் நீர்வரத்து அதிகரித்து குளங்களின் நீர் மட்டமானது சடுதியாக உயர்வடைந் துள்ளது. இதனால் பல குளங்கள் வான் பாய்ந்ததுடன் 114 குளங்கள் உடைப்பெடுத்துள்ளன.

இதன்காரணமாக மக்களுடைய குடிமனைகளுக்குள்ளும் விவசாய நிலங்களுக்குள்ளும் குளத்து வெள்ளநீர் புகுந்தமையால் மக்கள் பல்வேறு பாதிப்புகளையும் சந்தித் துள்ளனர். இவ்வாறு உடைப்பெடுத்த 114 குளங்களில் 33 குளங் களை இராணுவத்தினரின் உதவியுடன் அதன் அணைகளைக் கட்டுவதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஏனைய குளங்களையும் அதனைத் தொடர்ந்து கட்டுமானச் செயற்பாடு களை முன்னெடுப்பதற்கு எதிர் பார்த்திருப்பதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ச-110)

## வழமைக்குத் திரும்பிய கண்டி—கொழும்பு வீதி

கொழும்பு, டிசெ. 5

சீரற்ற காலநிலை காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டிருந்த கண்டி - கொழும்பு பிரதான வீதி மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதி நேற்றுமுன்தினம் மாலை முதல் திறக்கப்பட்டுள்ளதாகவும் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை மட்டுமே இந்த வீதியின் ஊடாகப் பயணத்தை மேற்கொள்ள அனுமதிக்கப் பட்டுள்ளதெனவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)

## 20,000க்கும் மேற்பட்டோர் 3 நாள்களில் குருதித்தானம்

கொழும்பு, டிசெ. 5

மூன்று நாள்களுக்குள் 20,000க்கும் மேற்பட்ட இரத்த தானங்கள் பெறப்பட்டுள்ளதாக தேசிய இரத்த வங்கியின் இயக்குநர் மருத்துவர் லக்ஷ்மன் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

நாளொன்றுக்கு ஆயிரத்து 500 இரத்ததானம் தேவை. தற்போதைய இரத்த இருப்பு அடுத்த 15 நாள்களுக்குப் போதுமானது.

இதனால் தேசிய இரத்த வங்கியின் செயற்பாடுகள் இயல்பு நிலைக்குத் திரும்ப முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

## துப்பாக்கிச்சூடு; ஒருவர் காயம்

கொழும்பு, டிசெ. 5

கொஸ்கம - பொரலுகொட பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

அவர் தற்போது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப் படுகிறது. (ச)



## பல்கலை மாணவர்களுக்கு மேலதிகமாக ‘மஹாபொல’

கொழும்பு, டிசெ. 5

பல்கலைக்கழக மாணவர்களுக்கு மேலதிக மஹாபொல தவணைக்கட்டணமொன்றை வழங்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித் துள்ளது.

சீரற்ற வானிலை காரணமாக பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ள பல்கலைக்கழக மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளைச் சிரமமின்றி மீண்டும் தொடர்வதற்காக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மேலதிக மஹாபொல தவணைக் கட்டணத்தை இன்று முதல் ஆம் திகதி வழங்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. (ச-இ)

நாளை

வெள்ளிக்கிழமை கார்த்திகை 20

06.12.2025

சுபநேரம் : 03.17 - 04.47

ராகுகாலம் : 09.17 - 10.47


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். திடீர்ச்செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சிதரும் செய்தி வந்துசேரும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பாராத பொருள்வரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் சற்றுத் தாமதமாகத்தான் முடியும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும்.

**மிதுனம்:** சகோதரவகையில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும். அரசாங்கவகையில் எதிர்பார்க்கும் காரியம் அனுகூலமாகமுடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாள். தேவையான பணம் கையில் இருக்கும். இளைய சகோதரர் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு முக்கியமான பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் தொடர் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் இனந்தெரியாத உற்சாகம் பெருக்கெடுக்கும். ஆனால், புதிய முயற்சி எதையும் இன்று தொடங்கவேண்டாம். திடீர்செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

**கன்னி:** அரசாங்க அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவுகளைப் பிற்பகலுக்குமேல் மேற்கொள்வது சாதகமாகமுடியும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். மாலையில் குடும்பத்துடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** புதிய முயற்சி எதுவும் இன்றைக்கு வேண்டாம். வெளியூர்ப்பயணம் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக் கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்குப் பணியின் காரணமாக பயணம் மேற்கொள்ளநேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** பிற்பகலுக்குமேல் அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும். சகோதர்களுக்காக செலவுசெய்யவேண்டிவரும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். பிள்ளைகள்வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப்பயணங்களையும், வெளியிடங்களில் சாப்பிடுவதையும் தவிர்ப்பது நல்லது. உறவினர்கள் வருகையால் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.

# வடமராட்சியில் உயிரோடிருக்கும் தமிழ்ப் பழமொழிகள்



■ ஆதம்பாவா பாத்திமா சாஜிதா

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் மத்தியில் நாட்டார் பழமொழிகளும் நாட்டார் கதைகளும் மற்றும் ஏனைய நாட்டாரியல்களும் தற்காலத்தில் மருவிய நிலையில் இருந்தாலும், திரிவுபடுத்தப்பட்ட நிலையில் அழிந்து சென்றாலும்கூட அவை இன்றும் கிராம மக்களால் ஆங்காங்கே புழக்கத்தில் உள்ளன. இதைப் பார்க்கும் போது இந்தப்பாரம்பரியம் ஓரளவேனும் பாதுகாக்கப் பட்டுப் பேணப்படுகின்றது அல்லது அடுத்த தலைமுறையினருக்கு அது கொண்டு சேர்க்கப்படுகின்றது என்று நிம்மதியடையமுடிகின்றது.

வீடுகளிலுள்ள சிறுவர்களுக்கு நாட்டார் கதைகள் சொல்லுதல், நாட்டார் பாடல்கள் பாடுதல் மற்றும் தங்களது அனுபவங்களை வெளிப்படுத்துதல் அதேபோல் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப சிறுவர்களுக்கும், பெண்களுக்கும் எனப் பழமொழிகள் சொல்லும் பழக்கம் யாழ்ப்பாணத்து வடமராட்சி மக்களிடையே இப்போதும் இருக்கின்றது.

அந்த வகையில் பெண்களுக்கு பெண்ணியம் சார்ந்த அதாவது ஆணாதிக்க எண்ணக்கரு கொண்ட பல்வேறு பழமொழிகள் உபயோகிக்கப்படுவதனையும் காண முடிகின்றது. அதேபோல் சிறுவர்களுக்கு அவர்களது வாழ்வியலை எடுத்துக் கூறுவதற்கும் சிறுவர்களை தூண்டச் செய்வதற்கும் அவர்களை ஊக்கப்படுத்துவதற்குமென பழமொழிகள் உபயோகிக்கப்படுவதையும் பார்க்கலாம்.

பிள்ளைகளுக்கு புத்திமதி சொல்லுவதற்காக "கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு" , "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்ற பழமொழிகளையும், எமது உள்ளத்தின் அழகு அல்லது நம்முடன் அகநிலையை தெளிவாக வெளிப்படுத்தி காண்பிப்பதற்காக "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்று அழகிய வரிகள் ஊடாகவும், நன்மையான காரியம் ஏளனமான கீழ்த் தரப்பட்ட மக்களால் செய்யப்பட்டிருந்தது என்றால் அந்த விடயத்தைக்கூட அழகிய முறையில் "வெளிச்சத்தைப் பார் விளக்கைப் பாக்காத" என்றும், குடும்ப உறவுகள், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் எமக்குத் துரோகம் செய்கின்ற நேரம் அதனை எடுத்துக் கூறுவதற்காக "நீட்டி வைத்த விருந்து நெறிகேடு தரும்" , "அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தி புறத்திதான்" , "பிள்ளையும் கிள்ளித் தொட்டிலும் ஆட்டுறது" போன்ற பழமொழிகளும், அத்தோடு விருந்தோம்பலை வெளிப்படுத்தி நிற்பதற்கு "அடிமேல் அடி அடிச்சால் அம்மியும் நகரும்" "அச்சாணி இல்லாத தேர் முச்சாணுனும் செல்லாது" "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்" போன்ற பழமொழிகளும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

பெண்களைக் குறிப்பிடுகின்ற பழமொழிகளும் அங்கு அதிகளவில் புழங்குநிலையில் உள்ளன. "பொம்பள சிரிச்சா போச்சு புகையிலை விரிச்சா போச்சு" "தாயைப் போல பிள்ள நூலைப் ல போல சேலை" "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" "அரசனை நம்பி புருஷனை கைவிட்டாளாம்" "சேலை கட்டிய மாதரை நம்பாதே" போன்ற பழமொழிகளைக் குறிப்பிடலாம். அதேவேளை திரிவுபடுத்தப்பட்டும் சில பழமொழிகள் காணப்படுகின்றன. அதாவது "அரசனை நம்பி புருஷனைக் கைவிட்டாளாம்" என்ற பழமொழியின் சரியான பதம் "அரசினை நம்பி புருஷனை கைவிட்டாளாம்" ஆகும். அதாவது இந்துக்களின் நம்பிக்கையின் படி அரச மரத்துக்கிடையிலான எமது ஸ்பரிசம் பிள்ளைப்பேற்றினை உருவாக்கும் தன்மை கொண்டது. இவ்விடயம் பிற்பட்ட காலத்தில் வசதியான ஒருத்தனை நம்பி புருஷனை கைவிட்டாள் என்ற மொழிவழக்கிற்கு மாற்றமடைந்துவிட்டது. அடுத்ததாக "சேலை கட்டிய மாதரை நம்பாதே" இதன் சரியான பதம் "சேல் அகட்டிய மாதரை நம்பாதே" என்பதாகும். அதாவது சேல் என்பது பார்வை. பார்வையை விரிக்கின்ற அல்லது பல ஆண்களைப் பார்க்கின்ற பெண்களை நம்பாதே என்பது பிற்பட்ட காலங்களில் திரிபடைந்து சேலை கட்டிய மாதரை நம்பாதே என்று பொருள்பட்டு விட்டது.

பெண்களை முதன்மைப்படுத்தியும் சில பழமொழிகள் பயன்படுத்தப்படுவதனையும் காணமுடிகின்றது. அதாவது "அம்மா இல்லாத வீடு அழகு இல்லாத தோட்டம்" என்ற பழமொழி வீட்டில் பெண்கள் எவ்வளவு முக்கியம் என்பதைக் குறித்து நிற்கிறது .

எனவே யாழ்.குடா நாட்டில் அதுவும் குறிப்பாக வடமராட்சிப் பகுதியில் பழமொழிகள் உயிரோட்டமாக வாழ்கின்றன . இவற்றை அடுத்தடுத்த தலைமுறையினர்க்கு பேணிப் பாதுகாத்துக் கொண்டு போய் சேர்ப்பதில் எம் எல்லோருடைய பங்களிப்பும் மிக அவசியமானது. அதனை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்பட வேண்டும். ■

படங்கள்: ஐ. சிவசாந்தன்





# நல்லூரில் சொக்கப்பனை


யாழ்ப்பாணம், டிசெ. 5

யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் திருக்கார்த்திகை உற்சவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை சிறப்பாக நடைபெற்றது.

கார்த்திகை மாத, கார்த்திகை நட்சத்திரத்துடன் கூடிய குமராலய தீபத் திருநாளான நேற்று மாலை வசந்தமண்டபப் பூஜை நடைபெற்று, வள்ளி, தேவசேனா சமேதராக தங்கமயில் வாகனத்தில் முத்துக்குமாரசுவாமி எழுந்தருளி, ஆலய முன்றலில் அமைக்கப்பட்டிருந்த சொக்கப்பனை கொளுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நல்லூர் முருகப்பெருமான் வெளிவீதியுலா வந்தமை சிறப்பாக நடைபெற்றது. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சொலமன் றெஜிராஜசீலன் கருண சூரியதாஸ்

**பல் வைத்தியர் (உரிமையாளர் - லாவண்யா பல் மூக்கு கண்ணாடியகம்)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சொலமன் றெஜிராஜசீலன் கருண சூரியதாஸ் அவர்கள் 02.12.2025 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜதுரை சொலமன் - அருள் கிறேஸ் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் சேவியர் - லில்லி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புளொரான்சியா றெஜி சொலமன் (ஜொய்சி, ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், தக்ஷி, Dr.புருஷோத்தமன் (Jaffna Dental Clinic), லாவண்யா, தர்மினி (teacher - சுவிடன்), மைத்திரி (சிங்கப்பூர்), பிரபாகரன் (Engineer - கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr.s.சிவரூபன், P.நரேன் (Asst. Manager - SLT), சதீஸ்குமார் (C.N.C Operator - சுவிடன்), ஜெனற்ரஸ் (Solution Architect - சிங்கப்பூர்), Dr p.சந்திரப்பிரியா, ஆகியோரின் அன்பு மாமனாரும், காவியன் (U.K), யோகிதன், ஹாஷினி, ஆரோன், அத்விகா, காருண்யன், கவிநயா, தேஷோத், ஆதீரன், கத்லீன், விகான் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான அன்ரன் லெஸ்லி சொலமன், பிரான்ஸிஸ்கா, தேவி, அனஸ்ரேசியா மற்றும் றெனி சொலமன், காலஞ்சென்ற மீரியம் மற்றும் இவோன் சாந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற புனிதா (மன்னார்) மற்றும் அருமைநாதன், காலஞ்சென்ற சூசப்பிள்ளை மற்றும் மன்டுகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற வைலற் மற்றும் வேதாசலம் மற்றும் குகதாஸ் (பிரான்ஸ்), விவியன், மேரி பெனிக்னா, கிளோறன்சியா, புளோரிடா, காலஞ்சென்ற யோசப் ஸ்பென்சர் மற்றும் றுவினா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைத் திருப்பலி இன்று (05.12.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 60088) E

**தோற்றம்**
**09.05.1944**

**மறைவு**
**02.12.2025**

**இல. 385**
**பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு**
**08.07.1944**

**உதிர்வு**
**16.11.2024**



**மலர்வு**
**26.09.1945**

**உதிர்வு**
**06.07.2024**

**தமிழ் பேராசான்**
## நாகலிங்கம் குழந்தைவேலு
(உதவி ஆணையாளர் கமநல சேவைத்திணைக்களம் - முல்லைத்தீவு)

**திரு திருமதி**
## குழந்தைவேலு விக்கினேஸ்வரி
(ஓய்வுபெற்ற உப அதிபர் யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்)

எங்களுக்குஉயிர்தந்த நீங்கள் உயிர் பிரிந்து ஓராண்டு கடந்தும்
எங்கள் மனங்களில் நீங்காமல் என்றும் நிறைந்து நிற்கின்றீர்கள்!
வாழ்க்கைச் சக்கரத்தில் இதுவும் கடந்து போகும்
என்று சொல்வது போல் எம்மால் கடந்து செல்லமுடியவில்லை !
உங்களின் இழப்புத் தந்து சென்ற இந்த ஆழமான வலிகளை
அனுபவிக்கும் போது மட்டும் தான் புரிகின்றது !
எம் உணர்ச்சிகளை வெறும் ஏட்டில் வடிக்க முடியவில்லை !
உங்களை மறக்க முடியாமல் நித்தம் நித்தம் தவிக்கும் எங்கள் மனதால்
உங்கள் ஆத்மாசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம் !
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

**துயர்பகிர்வோர்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.
## சந்தைகள், கோழி இறைச்சி மற்றும் கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2026

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கோழி இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், என்பவற்றிற்கு **2026.01.01** ஆம் திகதி தொடக்கம் **2026.12.31** ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி | :- 2025.12.05 - 2025.12.12 பிற்பகல் 03.00 மணி வரை |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி | :- 2025.12.15 மு.ப 10.00 மணி வரை |
| கேள்விதிறக்கும் திகதி | :- 2025.12.15 மு.ப 10.00 மணி |
| கேள்வி பத்திரம் திறக்கும் இடம் | :- வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகம் |

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, இணைப்பிரதி உட்பட இரு பிரதிகளையும் **தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்** என்ற முகவரிக்கு **15.12.2025** ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம்முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கபெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு

1. கேள்விப் பத்திரம் / பத்திரங்கள் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் **அடையாள அட்டை**யையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் **வதிவிடச் சான்றிதழையும்** சமர்ப்பித்தல் வேண்டும்.
2. சந்தையில் கோழி இறைச்சிக்கடைக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளதால் சந்தை வளாகத்திற்குள் கோழி விற்பனை, கோழி உரித்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
3. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
4. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப் படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், போதிய காரணங்களால் எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச்சபை தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.
6. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் $^{1}/_{3}$ பகுதியை **2025 டிசம்பர் 22 ஆம்** திகதி பி.ப 3.00 மணிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ள வேண்டும்.
7. ஒப்பந்தகாரர் குத்தகை ஏற்கும் போது உள்ள கட்டடத்தின் தரம், கட்டட அமைப்புக்கள் யாவும் உரியமுறையில் பேணப்பட்டு குத்தகைக் காலம் பூர்த்தியடையும் போது மீண்டும் அதே நிலையில் கையளித்தல் வேண்டும்.
8. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இடல் வேண்டும். பொதுசுகாதார பரிசோதகரது அறிவுறுத்தலை கடைப்பிடித்தல் வேண்டும். மீன் வெட்டுபவர்களிடம் பணம் அறவிடலாம்.
9. **சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் வியாபார நோக்கத்திற்காக கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% உம், மீன், இறால், நண்டு, கணவாய் கிலோ ஒன்றிற்கு ரூபா 10.00 உம், வியாபார நோக்கத்திற்கு வரும் லொறிக்கு ரூபா 30.00 உம், வியாபாரிகளிற்கான இடவரி தொடர்பில் மரக்கறிச் சந்தையில் விற்பனை செய்யும் 5' நீளம் கொண்ட முகப்புக்கு ரூபா 125.00 உம் மீன் வெட்டும் இடம் ஊடு ஒன்றிற்கு (5'X 3') ரூபா 150.00 உம் ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 10.00, உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 20.00 இனையும் அறவிடலாம். மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் அறவிடக்கூடாது. பொதுச்சந்தையில் கழிவு நடைமுறை தரகுக்கட்டண நடைமுறை என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.**
10. **பொதுமலசலகூடத்தைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணம் ரூபா 20.00 ற்கு மேல் வரி அறவிடமுடியாது.**
11. வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன் சந்தையை குத்தகைக்கு பெறுபவர்கள் "ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம்" அல்லது "உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம்" என்ற சிட்டையைக் கொடுத்து அதற்குரிய பணத்தை அறவிடமுடியும்.
12. பின்வரும் சந்தைகளைக் குத்தகைக்கு எடுக்கும் குத்தகைக்காரர்கள் மாதாந்தம் நிலையான மின்சாரக்கட்டணமாக கீழ்வரும் விபரப்படி மாதாந்தக்குத்தகையுடன் செலுத்துதல் வேண்டும். சங்கானை மீன் சந்தை-3,000.00, சத்தியக்காட்டுச்சந்தை கருவாட்டுக்கடை – 750.00
13. சந்தைச் சுற்றாடலில் இருந்து 500m சுற்றுவட்டத்தில் மீன், மரக்கறி, கோழி இறைச்சி என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
14. காலத்திற்கு காலம் அரசாங்க சுற்றறிக்கைகள் மூலம் அறவிடுமாறு அறிவிக்கப்படும் வரிகள் வாடகைத்தொகை மீள் மதிப்பீடு செய்யப்படின் அத்தொகையும் அறவிடப்படும்.
15. மூளாய் சந்தையினை குத்தகைக்கு எடுப்பவர் 01.01.2026 முதல் 31.12.2026 வரையான காலப்பகுதிக்கு குறித்த சந்தையின் மீன்வியாபாரிகளிடமிருந்து இவ் விளம்பரத்தின் பிரகாரம் கட்டணத்தை அறவிடமுடியும். கோழி இறைச்சி கடையை தமது செலவில் சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டலுக்கு அமைவாக அமைத்து கோழி இறைச்சியினை விற்பனை செய்ய முடியும்.
16. 2015.11.09 ஆம் திகதிய வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பதின்மூன்று விடயங்களும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.
17. மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்

### சந்தைகள், கோழியிறைச்சி மற்றும் கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான குத்தகை அட்டவணை – 2026

| இல | சந்தைகள் (வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன்), இறைச்சிக்கடைகள் கருவாட்டுக் கடைகள் | மாதாந்த வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT நீங்கலாக) | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| **சங்கானை உப அலுவலகம்** | | | | | |
| 01 | சங்கானை மீன் சந்தை | | 4,075,500.00 | 81,510.00 | 1,000.00 |
| 02 | சங்கானை கருவாட்டுக்கடை | 1,500.00 | 94,415.75 | 1,890.00 | 1,000.00 |
| 03 | சங்கானை மரக்கறிச் சந்தை பொது மலசலகூடம்- 01 | | 23,750.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | சங்கானை மரக்கறிச் சந்தை பொது மலசலகூடம்- 02 | | 23,750.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | சங்கானை பஸ்தரிப்பிட பொது மலசலகூடம் | | 23,750.00 | 1,000.00 | 1,000.00 |
| **சுழிபுரம் உப அலுவலகம்** | | | | | |
| 01 | சத்தியகாடு சந்தை கருவாட்டுக் கடை | 1,300.00 | 66,618.75 | 1,332.00 | 1,000.00 |
| 02 | பொன்னாலை வாராந்தச் சந்தை | | 49,690.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | மூளாய் மீன் சந்தை (கோழி இறைச்சி கடை உட்பட) | | 126,445.00 | 2,528.00 | 1,000.00 |
| **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | | | |
| 01 | சங்கரத்தை சந்தை | ___ | 502,132.95 | 10,042.00 | 1,000.00 |
| 02 | வட்டுக்கோட்டை பொதுச்சந்தை | ___ | 83,600.00 | 1,672.00 | 1,000.00 |

தலைவர்
பெறுகைக்குழு
வலிகாமம் மேற்கு பிரதேச சபை.
சுழிபுரம்.
05.12.2025

(CR 6336) A

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 28 . 11 . 1939



மறைவு 05 . 12 . 2017

அமரர்.திருமதி.
**யோகாம்பிகை இராமலிங்கம்**
(புங்குடுதீவு - 12, நாரந்தனை)

"அன்பான மொழி பேசி உறவுகளை அரவணைத்தீர்கள்
அம்மா என்ற சொல்லுக்கு அர்த்தமாய் வாழ்ந்தீர்கள்
எட்டு ஆண்டுகள் கடந்தாலும் இன்று போல் உள்ளதம்மா
நினைவு போல் இல்லையம்மா கனவு போல் உள்ளதம்மா
வாழ்ந்திடும் காலமெல்லாம் உங்கள் துயரம்தான்.
வழிந்தோடும் கண்ணீரை உங்கள் காலடியில் சேர்க்கின்றோம்"


உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தான்தோன்றி
ஸ்ரீ மனோன்மணி அம்பாளை வணங்கி வேண்டுகின்றோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

நாரந்தனை
ஊர்காவற்றுறை

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்

(CS 60084) E

## 29 ஆவது ஸ்தாபகர் ஞாபகார்த்த நினைவு நாள்



தோற்றம் 25.10.1936
மறைவு 05.12.1996

அமரர்
# பொன் நாகமணி
(மட்டுவில் வளர்மதி சனசமூக நிலைய ஸ்தாபகர்)

மட்டுவில் தெற்கில் பிறந்தார் அவர் ஒளியாக.
வளர்மதி சமூகம் மலர்ந்தது அவரின் கனவாக.
சேவை வழியில் அவர் முன்னோடியாக நடந்தார்,
ஒற்றுமை, அன்பு, முயற்சியில் அனைவரையும் இணைத்தார்.

சிந்தனை மலர்ந்த கலைகளில் விளைந்தார்,
தடைகள் இருந்தும் அவர் புது பாதை காட்டினார்.
ஆற்றலுடன் நின்றார் பல ஏணியாய்.
எம் ஊரை வளர்த்தார், மனங்களின் ஒளியாய்.

நினைவுகள் என்றும் அவரை புகழும்,
வல்லமையோடு எண்ணங்கள் மலரச் செய்யும்.
மதி கொண்ட வாழ்வு நம் இதயத்தில் தங்கும்,
காலங்கள் என்றும் அவரின் பெயரை போற்றும்.

**29 ஆண்டுகள் கடந்தும் மாறாத அன்போடும்
எண்ணங்களோடும் அவரை நினைவு கூறுகிறோம்.**

**வளர்மதி சனசமூக நிலையமும்
அதன் துணை அமைப்புகளும்**

(CS 60090) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய்ச்சல் இருநாள் நீடித்தால் மருத்துவரை உடன் நாடுங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.5

இரண்டு தினங்களுக்கு மேல் காய்ச்சல் காணப்படின் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனையில் குருதிப் பரிசோதனை மேற்கொண்டு சிகிச்சை பெறுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏற்பட்ட சீரற்ற நிலைமை காரணமாக சிக்கன்குனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை நேற்றுமுன்தினம் மூவர் சிக்கன் குனியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்குட்பட்ட பகுதிகளிலும் இதுவரை 14 பேர் சிக்கன்குனியா காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர்.

எனவே தற்போது நிலவும் சீரற்ற காலநிலையின் தாக்கத்தைக் கருத்திற்கொண்டு காய்ச்சல் குறித்து மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-9)

## வட இலங்கைச் சங்கீத சபை
## பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோருதல் -2026

வட இலங்கைச் சங்கீத சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான பரீட்சை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தையும், அறிவுறுத்தல்களையும் 01.12.2025 தொடக்கம் www.ncomsjaffna.com எனும் இணையத் தளத்தில் பதிவிறக்கம் செய்து, அறிவுறுத்தல்களில் குறிப்பிட்டவாறு படிவத்தைப் பூர்த்தி செய்து உரிய கட்டணங்களைச் செலுத்திய பற்றுச்சீட்டுடன் வட இலங்கைச் சங்கீத சபை, மருதனார்மடம், சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி - 31.12.2025**

**மாலதி முகுந்தன்**
**தலைவர்**
**வட இலங்கைச் சங்கீத சபை**
**மருதனார்மடம் - சுன்னாகம்**

## யாழ் விழிப்புலனற்றோர் சங்க வளர்ச்சி நிதிக்காக உற்சவகால அதிஸ்ட இலாபச் சீட்டிழுப்பு



எம் இனிய உறவுகளே வணக்கம்,

இற்றைக்கு 49 ஆண்டுகளுக்கு மேலாக உங்களின் நிதிப் பங்களிப்போடு இயங்கி வருகின்ற யாழ் விழிப் புலனற்றோர் சங்கம் ஆண்டுதோறும் பார்வையற்றவர்களின் பன்முகப்பணிகளுக்காக முன்னெடுத்து வருகின்ற உற்சவகால அதிஸ்ட இலாப செயற்றிட்டத்தினை இந்த ஆண்டும் வர்த்தகப் பெருமக்களின் அனுசரணையோடும் மனிதநேயமுள்ள தங்களின் உதவியோடும் எமது பொதுச்சபை உறுப்பினர்களின் பங்களிப்போடும் முன்னெடுத்திருந்தோம். அதன் வெற்றியாளர் தெரிவை நாம் 03.12.2025 அன்று எமது பிரதான அலுவலகத்தில் நடாத்தினோம் அத் தெரிவில் 1ம் பரிசான Lumala Bicycle இனைப் பெறும் அதிஸ்ரசாலிக்குரிய இலக்கமாக 10735 தெரிவுசெய்யப்பட்டுள்ளது. 2வது பரிசான 32" Tele Sonic தொலைக்காட்சியினைப் பெறும் அதிஸ்ரசாலிக்குரிய இலக்கமாக 08347 தெரிவுசெய்யப்பட்டுள்ளது. 3வது பரிசான Gas Cooker (Nipon) பெறும் அதிஸ்ரசாலிக்குரிய இலக்கமாக 09016 தெரிவு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கும் நாம் அதிஸ்டசாலிகளுக்கு வாழ்த்துக்களையும் எம் மீது அக்கறை கொண்ட அனைத்து நண்பர்களுக்கு எமது அன்பையும் பரிமாறி மகிழ்கிறோம்.

வெற்றியாளர்களே உங்கள் பரிசுகளை 31.12.2025 இற்கு முன்பதாக அலுவலக தினங்களில் காலை 09.30 மணி தொடக்கம் மாலை 04.00 மணி வரையுள்ள நேரத்துக்குள் தங்களது அதிஸ்ட சீட்டுக்களை கொண்டு வந்து உறுதிப்படுத்தி பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம், 31.12.2025 இற்குப் பின்னர் தங்களால் பெற்றுக்கொள்ளப்படாத பரிசில்கள் எமது நிறுவனத்திற்கே சொந்தமானது என்பதையும் தங்களின் மேலான கவனத்திற்கு தெரியப்படுத்துகிறோம். உறவுகளே அடுத்த ஆண்டும் எமது சமூகப்பணிக்கான இச் செயற்றிட்டத்தில் அன்போடும் அக்கறையோடும் பங்களிக்குமாறு தங்களைத் தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

## கேள்வி அறிவித்தல்
## கரைதுறைப்பற்று பிரதேசசபை முல்லைத்தீவு
## தனியார் பாதுகாப்புச் சேவை 2026

01. தலைவர், கரைதுறைப்பற்று பிரதேசசபை உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழுவினால் (LAPC) கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட தலைமை அலுவலகம், உப அலுவலகம், பேரூந்து நிலையம் கழிவகற்றல் மையம், சுற்றுலா தலங்கள் என்பவற்றிற்கு பாதுகாப்பு சேவையை வழங்குவதற்குத் தகமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
02. கேள்வி கோரலானது தேசிய போட்டி விலைக்கேள்வி முறைப்படி மேற்கொள்ளப்படும்.
03. இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அட்டவணையில் விவரிக்கப்பட்ட சேவைக்காக கேள்வி கோரப்படுகின்றன.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு தொலைபேசி:- 021-2290070/0212290001 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தவிசாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு எனும் இடத்திலிருந்து 05.12.2025 ஆம் திகதியிலிருந்து 18.12.2025ம் திகதிவரை வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் மாலை 02.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 3000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு எனும் முகவரிக்கு 19.12.2025ம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் இவ் வேலைக்குரிய கேள்வி அடையாள இலக்கத்தினை தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடன் வருகை தரும் கேள்விதாரரின் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
07. கேள்வி தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் 10.12.2025 நடைபெறும்.
08. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
09. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக கரைதுறைப்பற்று பிரதேசசபையின் பெறுகைக் குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.

| இல | கேள்வி இலக்கம் | வேலை விபரம் | ஆளணி விபரம் | | ஒப்பந்த காலம் | கேள்விப் பிணை | கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | இரவு/பகல் | இரவு | | | |
| 1 | NP/14/44(1)/02/03/Sec.Ser/2026 | பாதுகாப்பு சேவை | 04 | 03 | 01 வருடம் | 45,000.00 | 22.01.2026 |

தலைவர்,
உள்ளூராட்சி பெறுகைக் குழு
கரைதுறைப்பற்று பிரதேச சபை
முல்லைத்தீவு.

05.12.2025




## நல்லூர் பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம்

நல்லூர் பிரதேசசபையின் 2026 ஆம் ஆண்டிற்கான வரைபு வரவுசெலவுத்திட்டம் "1987 ஆம் ஆண்டு பிரதேசசபைகள் சட்டத்தின் 15 ஆம் இலக்க 168 ஆம் பிரிவிற்கமைய" தயாரிக்கப்பட்டு 05.12.2025 தொடக்கம் 11.12.2025 ஆம் திகதி வரை எமது தலைமை அலுவலகம். உப அலுவலகங்கள். பொது நூலகங்கள் மற்றும் சனசமூக நிலையங்களில் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது என்பதுடன். இதனை அலுவலக நேரங்களில் பார்வையிடலாம் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**ப.மயூரன்**
**தவிசாளர்.**
**நல்லூர் பிரதேசசபை.**

(CS/46623) J-1

## கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
## காணி விற்பனை

சங்கத்திற்கு சொந்தமானதும் யாழ்ப்பாணம் பகுதி வண்ணார் பண்ணை கோவில் பற்று வடமேற்கு இறை வெள்ளையன் வளவு என்னும் பெயர் கொண்டதும் நிலப்பரப்பு 05 குழி 05 விஸ்திரணம் கொண்ட வீட்டுக் காணி விற்பனைக்கு உண்டு. கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் சங்க விண்ணப்பப் படிவத்தினை பெற்று மீளளிக்கப்படாத கட்டுப்பணம் ரூபா 1000.00 செலுத்தி பூர்த்தி செய்து தலைவர் கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தாவடிச் சந்தி கோண்டாவில் எனும் பெயர் முகவரிக்கு பதிவுத்தபாலில் 20.12.2025 ம் திகதி 12.00 மணிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். (முழு விபரம் விண்ணப்பத்தில் உள்ளது)

நன்றி

**கூட்டுறவுச் சேவையிலுள்ள**
**பொது முகாமையாளர்**

(CR 46616) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலிக்காய்ச்சல் அறிகுறிகள் மக்கள் மிகவும் அவதானம்

## கிளிநொச்சி சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் தெரிவிப்பு

**கிளிநொச்சி, டிசெ. 5**

**எலிக்காய்ச்சல் அறிகுறி தென்பட்டால் உடனடியாக மருத்துவமனையை நாடி உயிரிழப்பைத் தவிர்க்கவேண்டும் என கிளிநொச்சிப் பிராந்திய பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சிவஞானசுந்தரம் சேரலாதன் தெரிவித் துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தின் வெள்ள நிலைமையின் பின்பு மக்களுக்கு தெளிவூட்டும் ஊடக சந்திப்பு கிளிநொச்சிப் பிராந்திய சுகாதாரசேவை கள் பணிமனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது வெள்ளம் வடிந்து மக்கள் தமது குடியிருப்புகளுக்கு திரும்புகின்ற நிலையில் நீர்ச்சிரங் குகள் ஏற்படும் வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இதனைத் தவிர்க்க பாதங்களை மெல்லிய சுடுதண்ணீரில் கழுவினால் நீர்ச்சிரங்கு இல்லாது போகும்.

அத்துடன் வெள்ளத்தின் பின்பு எலிக்காய்ச்சல் பரவும் நிலை காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் இருவர் எலிக்காய்ச்சலால் உயிரிழந்துள்ளனர். விவசாயிகள், வெள்ள அனர்த்தங்களில் கடமையாற்றுபவர்கள் பொதுச்சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைகளைப்பெற்று வாரம் ஒரு முறை தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

எலிக்காய்ச்சல் அறிகுறியான கடுமையான காய்ச்சல், தலைவலி, வயிற்றுவலி போன்றவை காணப்பட்டால் உடனடியாக மருத்துவமனையை நாடி உரிய சிகிச்சையை பெற்றுக்கொள்ள வேண்டும்.

குறித்த அறிகுறிகளை கருத்தில் கொள்ளாது விடின் எலிக்காய்ச்சல் காரணமாக மூளை, சிறுநீரகங் கள், ஈரல் பாதிக்கப்படுவதுடன் உயிரிழப்பும் நேரிடலாம்.

மக்களுக்கான சுகாதார ஆலோசனைகளை வழங்குவதற்கு மாவட்டத்திலுள்ள நான்கு சுகாதார மருத்துவ அதிகாரிகள் தயாராகவுள்ளனர். எனவே கரைச்சி 077443 3172, கண்டாவளை 07772 52136, பூநகரி 0772364680 , பளை 0776630613 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொண்டு சுகாதார ஆலோசனைகளைப் பெறலாம்- என்றார். (ச-113)

## நுரைச்சோலையில் இரட்டைக்கொலை!

நுரைச்சோலையில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் இருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளனர். ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளானநிலையில் மருத்துவமனையில் சேர்க் கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் நுரைச்சோலைப் பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சம்பவம் குறித்து நுரைச்சோலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

## பெயர் மாற்றம்

6ம் வட்டாரம் சிவநகர், புதுக்குடியிருப்பில் வதியும், **கனகசபை தாமோதரம்பிள்ளை** ஆகிய நான் எனது பெயரை **கனகசபை மயில்வாகனம்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **கனகசபை மயில்வாகனம்** என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**கனகசபை மயில்வாகனம்**

(CS 30419) A

## கண்ணீர் அஞ்சலி



**தோற்றம்** **20.12.1948**

**மறைவு** **04.12.2025**

யா/நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க.
வித்தியாலயத்தின் ஆசிரியை
**திருமதி நிறஞ்சினி சுரேஸ்**
அவர்களின் பாசமிகு தந்தை
**கணேசபிள்ளை நடேசபிள்ளை**


அவர்கள் நேற்று (04.12.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க. வித்தியாலயம்**

CS 30855) A

## மரண அறிவித்தல்

**தோற்றம்** **20 . 12 . 1948**



**மறைவு** **04 . 12 . 2025**

### கணபதிப்பிள்ளை நடேசப்பிள்ளை

நெடுந்தீவு மேற்கு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஸ்கந்தப்புரத்தை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான கணபதிப்பிள்ளை நடேசப்பிள்ளை அவர்கள் நேற்று (04.12.2025) வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் கணபதிப்பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகப்பர் முதலியார், மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் பேரனும், காலஞ்சென்ற மருதலிங்கம் முதலியார், தங்கம்மா தம்பதியரின் மருமகனும், சகுந்தலா தேவியின் அன்புக் கணவரும், லட்சுமி (ஸ்கந்தபுரம்), காலஞ்சென்றவர்களான கனகம்மா, பசுபதிப்பிள்ளை, முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்புத் சகோதரனும், நிரஞ்சினி (ஆசிரியர், யாழ்ப்பாணம்), பத்மஜா (ஜேர்மனி), விஜிதா (பிரான்ஸ்), சுசாந்தன் (மல்லாவி), நிசாந்தன் (யாழ்ப்பாணம்), வித்யா (கனடா), சௌதனன் (யாழ்ப்பாணம் - காசாளர்), கவின்ஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான தியாகராசா, கந்தையா மற்றும் கேசலாதேவி, தியாகராசா (ஸ்கந்தபுரம்) ஆகியோரின் மைத்துனரும், வேலணையூர் சுரேஸ், கிருபாகரன், பாஸ்கரன், சுகிர்தா, சயந்தன், சுபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சத்தியதேவி, அகிலன் ஆகியோரின் பாசமிகு சிறியதந்தையும், தயாபரன் கேதீஸ்வரன், அமரர் நந்தபாலன், மற்றும் பரமேஸ்வரன், கோகிலாதேவி, அசோதா (ஸ்கந்தபுரம்), புஸ்பலலிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தேனாள், கதிரவன், போமிகா, யாதர்த்தன், யுகார்த்தன், சுபகவி, ஜெயனி, சிவானா, சுகவேலன், அகவன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2025) வெள்ளிக்கிழமை கல்வியங்காட்டில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



### திரு. பொன்னம்பலம் குலசிங்கம்

வேலணை 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.09, பழங்கிணற்றடி பிள்ளையார் கோயில் வீதி, திருநெல்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் குலசிங்கம் அவர்கள் கடந்த (03.12.2025) புதன்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - அழகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நீலாயதாட்சியின் அன்புக் கணவரும், வெங்கடேஷ் (முகாமையாளர் - மக்கள் வங்கி, சாவகச்சேரி), லிங்கேஷ் (U.S.A), சிவசக்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர் விவசாயத் திணைக்களம், நாரேன்பிட்டிய) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஷாமினி, வினுஜா (U.S.A), வாகீசன் (தூதுவராலயம் - அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அகரன், அபூர்வா, கோவினேஷ் (U.S.A), விக்னேஷ்கார்த்தி (U.S.A), சீர்த்தி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சோமசேகரம், தவமணி, சேனாதிராஜா, கிருஷ்ணபிள்ளை மற்றும் கமலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான மங்கையர்க்கரசி, சாம்பசிவம் மற்றும் சத்தியவதி, நித்தியலக்சுமி, சிவலிங்கம், சரோஜினிதேவி (ராசா), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் யோகாம்பிகை (அம்பிகா), காலஞ்சென்ற கதிரமலைநாதன் (முருகன்) மற்றும் பத்மராஜன் (பழனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சபாரட்ணம் மற்றும் இந்திராணி காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் இராஜலக்சுமி (ராணி) மற்றும் காலஞ்சென்ற சாந்தினி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2025) வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிராமண உயரப்புலம் (பால்பண்ணை) இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.09, பழங்கிணற்றடி**
**பிள்ளையார் கோயில் வீதி,**
**திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**வெங்கடேஷ் (மகன்) - 076 438 0304**
**லிங்கேஷ் (மகன்) - 001 312 282 9305**
**சிவசக்தி (மகள்) - 077 615 1170**

(CS 60081) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டித்வாவுக்குப்...

திணைக்களம் மேலும் தெரிவித்ததாவது:- கடந்த 28, 29 மற்றும் 30ஆம் திகதிகளி லேயே இந்த அனர்த்தங்கள் ஏற்பட்டுள் ளன. பதுளை, கண்டி, மாத்தளை, நுவ ரெலியா, கேகாலை, குருநாகல் மற்றும் மொனராகலை மாவட்டங்களிலேயே அதி களவான மண்சரிவுகள் பதிவாகியுள்ளன. இதனிடையே, சில தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்கள் முற்றிலும் பாதிக்கப்பட்டுள் ளன ஆயினும், அவற்றை அணுகுவ தற்கு வீதிகள் இல்லை. வான்வழி படங் கள் மூலம் சிறிய நிலச்சரிவுகளை அடை யாளம் காண்பது கடினமான நிலையில், பல்வேறு இடங்களைக் கண்காணிப்ப தற்கு, 55 பேர்கொண்ட குழு நியமிக்கப்பட் டுள்ளது - என்றுள்ளது. (அ-ம)

## ஆட்சியைக்...

இடர் நிலைமையைப் பயன்படுத்தி ஆட் சியைக் கவிழ்ப்பதற்கு நாம் முற்பட வில்லை. மாறாக அரசாங்கம் இழைக் கும் தவறுகளையே சுட்டிக்காட்டுகின் றோம் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலா ளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்த தாவது:-

அனர்த்த நிலைவரம் தொடர்பில் சர்வ கட்சி கூட்டத்தை கூட்டுமாறு கோரியுள் ளோம். நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்குரிய யோசனைகளையும் நாம் முன்வைத்துள்ளோம். அதேபோல நிவா ரணப் பணி உள்ளிட்ட விடயங்களில் நிலவும் குறைபாடுகளை சுட்டிக்காட்டுகின் றோம். அனர்த்த நிலைவரத்தை வைத்து நாம் அரசியல் செய்யவில்லை - என் றார். (அ-ம-44)

## சர்வதேச...

வலியுறுத்தியுள்ளது. கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித் ததாவது:-

டித்வா புயலால் இலங்கையின் பொருளா தாரம் நிலைகுலைந்துள்ளது. இலங் கையை மீட்பதற்கு சர்வதேச உதவிகளைப் பெறுவது மிகவும் அவசியம். எனவே, சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை அரசாங்கம் மிக விரைவாக நடத்த வேண்டும். தற்போதைய அரசாங் கத்துக்குப் போதுமான அனுபவம் இல்லை. எனவே, அனுபவம் உள்ளவர்கள் கூறும் ஆலோசனைக்கு அமைய அரசாங்கம் செயற்பட வேண்டும். நாடாளுமன்றப் பலம் உள்ளது என்பதற்காக அரசாங்கம் தன்னிச்சையான முறையில் செயற்படக் கூடாது - என்றார். (அ-ம-44)

## கரவெட்டியில்...

பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட் டோரின் தகவல்களைத் திரட்டும் நடவடிக் கையின்போது, கரவெட்டி பிரதேச செய கத்தில் இருந்து 8 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேரே பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஆரம்பத்தில் அறிக்கை வழங்கப் பட்டுள்ளது. இதையடுத்து, மாவட்டச் செயலர் இது தொடர்பில் பிரதேச செயல ருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

'யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2025.11.29 ஆம் திகதி பிற்பகல் 7 மணிவரையான அனர்த்த நிலைவர அறிக்கையின் பிர காரம் 8 ஆயிரத்து 129 குடும்பங்களைச் சேர்ந்த, 25 ஆயிரத்து 935 அங்கத்த வர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் கர வெட்டி பிரதேச செயலர் பிரிவில் 8 குடும் பங்களைச் சேர்ந்த 27 அங்கத்தவர்கள் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தங்களால் குறிப்பிடப்பட்டுள்ளது.

தங்களது பிரிவில் மேலதிக குடும்பங்கள் வெள்ளத்தால் அனர்த்தத்தால் பாதிக்கப் படவில்லையா? என்பதனை கிராம அலு வலர்கள் மூலமும், நேரடியாகவும் சென்று அறிக்கையாக நாளையதினம் (2025.11.30)அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்' என்றவாறாக அந்தக் கடிதம் அமைந்துள்ளது.

இந்தக் கடிதத்தின் பின்னரே, மாவட்டச் செயலரைத் திருப்திப்படுத்துவதற்காக கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் இருந்து பாதிப்பு சற்று அதிகரிக்கப்பட்டு அறிக்கை அனுப்பப்பட்டதாக தெரிவிக் கப்படுகின்றது. இதேபோன்றே மறைமுக அழுத்தங்கள் ஊடாக ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் வெள்ளத்தால் பாதிக் கப்பட்டவர்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கப்பட்டு 36 கோடி ரூபா பெறப்பட்டிருக்கலாம் என்று பொதுமக் கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

எனவே உண்மையில் பாதிக்கப்பட்டவர் கள் தொடர்பான தரவுகள் விரிவாக மீளாய்வு செய்யப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கிய தொகையைத் தவிர மீதித் தொகையை கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்ப வேண்டும் என்று மக்கள் பரவலாகக் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். அவர் களின் கருத்துக்கள் சமூக வலைத்தளங் களிலும் வலுவாக எதிரொலித்தன. (அ-ம)

## பிரதேசசபை...

மாரடைப்புக் காரணமாகவே இறப்புச் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள் ளது. (அ-ம-26-66)

## சிறுவர்களுக்கு...

டித்வா புயலால் ஏற்பட்ட வெள்ளப் பேரிடர் மற்றும் மண்சரிவுகளில் தமது உடைமை களையும் உறவுகளையும் இழந்த நூற் றுக்கணக்கான சிறுவர்களின் மனநலம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு சிறுவர் மருத்துவமனையின் மனநல மருத்துவ நிபுணர் தர்ஷனி ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலா ளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தா வது:-

நாடு முழுவதும் நிலவிய மோசமான கால நிலையால் பல உயிர்கள் காவு கொள்ளப் பட்டுள்ளன. இந்தப் பேரிடரில் பெற்றோர், சகோதரர்கள் மற்றும் நண்பர்கள் என தமது உறவுகளையும், உடைமைகளை யும் இழந்த நூற்றுக்கணக்கான சிறுவர் கள் நிர்க்கதியாகியுள்ளனர். அனர்த்தத் துக்கு முகம் கொடுத்தன் பின்னர் ஒவ்வொரு சிறுவர்களினதும் மனநிலை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஆகை யால் சமூகம் என்ற ரீதியில் அவர்களின் மனநலத்தைத் தேற்றுவது அனைவரின தும் கடமையாகும்.

தற்போது பிரதேச ரீதியில் குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்களின் உதவியு டன் சிறுவர்களின் மனநலம் தொடர்பில் ஆராய்ந்து, உள ஆற்றுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன. பெரியவர்களாகிய நாம் எமது உணர்வுகளை வெளிக்காட்டு வது போல, சிறுவர்களால் வெளிக்காட்ட முடியாது. அவர்களின் நடத்தை மாற்றத் தின் மூலமே மனப்பாதிப்பை கண்டு கொள்ள முடியும் - என்றார். (அ-ம-44)

## பொதுமக்களின்...

களிடம் கையளிக்குமாறு வலியுறுத்தியும் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத் தில் பொலிஸார் போராட்டக்காரர்களுடன் அடாவடியில் ஈடுபட்டமையால் பெரும் பதற்றம் நிலவியது.

நேற்றைய தினம் பூரணை தினத்தை முன்னிட்டுத் தையிட்டி திஸ்ஸ விகாரை யில் விசேட பூஜை வழிபாடுகள் நடை பெற்றன. திஸ்ஸ விகாரைக்கு அழைத்து வரப்பட்டவர்கள் போராட்டம் இடம்பெற்ற பகுதி வீதியைத் தவிர்த்து, விகாரையின் மறுபக்கமாக கொண்டு செல்லப்பட்டனர். இதனை அவதானித்த போராட்டக்காரர்க ளில் ஒரு பகுதியினர், மறுபக்கமாகவும் சென்று போராடினார்கள். இதற்குப் பொலி ஸார் எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்தே, பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக் கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற் பட்டு, தள்ளுமுள்ளாக மாறியது.

இதனையடுத்து பொலிஸார் கும்பலாகச் சென்று போராட்டக்காரர்கள் தற்காலி கமாக அமைத்திருந்த கொட்டகையைக் கிழித்து எறிந்தனர். அத்துடன் போராட்டத் தில் கலந்து கொண்டிருந்தவர்களைக் வீடி யோக்கள் எடுத்தும் பொலிஸார் அச்சுறுத் தினர். எனினும், இதன்பின்னரும் கொட் டும் மழைக்கு மத்தியில் நனைந்தவாறு போராட்டக்காரர்கள் போராட்டத்தைத் தொடர்ந்து திட்டமிட்டபடி மாலை 6 மணி யளவில் நிறைவு செய்தனர். (அ-ம-66)

## 5 பவுண்...

இது தொடர்பில் வீட்டின் உரிமையாளர்க ளால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-28)

## பேரிடர்...

டுள்ளது. ஜனாதிபதி அநுரகுமாரவின் தலைமையில், விசேட அமைச்சரவைக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே, 50 பில்லியன் ரூபாவை குறைநிரப்புப் பிரேரணையாக முன் வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த 50 பில்லியன் ரூபாவில், 20 பில்லியன் ரூபா அபிவிருத்தி நிவாரணங்களுக் காகவும், 30 பில்லியன் ரூபா அபிவி ருத்தி உதவிகளுக்காகவும் ஒதுக்கப்பட வுள்ளது. (அ-ம)

## நாயாற்றுப்...

நூற்றுக் கணக்கான இராணுவத்தினர், இராணுவப் பொறியியலாளர் படையணி யினர் இணைந்து இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் தலைமையி லான குழுவினர் இந்தப் பணிகளை நேற்று நேரில் சென்று பார்வையிட்டுள் ளனர். (அ-ம-26)

## யாழ்ப்பாணத்துக்கு...

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளில் துப்பரவுப் பணிகளை மேற்கொள்வதற் காக, அரசாங்கம் 25 ஆயிரம் ரூபாவை வழங்கி வருகின்றது. இவ்வாறான நிலை யிலேயே, ஒப்பீட்டளவில் புயலால் பெரும் பாதிப்பைச் சந்திக்காத யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 ஆயிரத்து 459 வீடுகள் பாதிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டு, 36 கோடியே 14 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான குடிசன மதிப் பீட்டின் பிரகாரம் நெடுந்தீவில் 893 வீடு களே காணப்படுகின்றன என்று குறிப்பி டப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையில், வெள்ள நிவாரண நிதியைப் பெறுவதற் கான விண்ணப்பத்தில் அங்கு ஆயிரத்து 216 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நெடுந்தீவு முழுவ தும் வெள்ளப் பேரிடர் ஏற்பட்டிருந்தால் கூட இத்தனை வீடுகள் பாதிக்கப்பட்டிருக் காது எனும்போது, இந்தக் கோரிக்கை கள் பெரும் விசனத்தையும் அதிருப்தி யையும் ஏற்படுத்தியுள்ளன.

கரவெட்டியைத் தவிர ஏனைய பிரதேசங் களிலும் இவ்வாறான மோசடியான தக வல்களே வழங்கப்பட்டுள்ளதாக பல தரப்பினரும் குற்றச்சாட்டுக்களை முன் வைத்துள்ளனர். அத்துடன், சிலர் தமது வீடு வெள்ளத்தால் பாதிக்கப்படாத நிலை யில், அரசாங்கத்தின் நிதி தமக்கு ஒதுக் கப்பட்டுள்ளதாகவும் அந்த நிதியை உண் மையில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வழங்குவதற்காக திருப்ப ஒப்படைக்கப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

பிரதேச செயலகங்களின் அடிப்படை யில், நெடுந்தீவில் ஆயிரத்து 216 வீடுக ளும், வேலணையில் 544 வீடுகளும், ஊர்காவற்றுறையில் 668 வீடுகளும், காரைநகரில் 268 வீடுகளும், யாழ்ப்பா ணத்தில் ஆயிரத்து 129 வீடுகளும், நல் லூரில் 791 வீடுகளும், கோப்பாயில் 466 வீடுகளும், சங்கானை 2 ஆயிரத்து 851 வீடுகளும், சண்டிலிப்பாய் 2 ஆயி ரத்து 107 வீடுகளும், உடுவிலில் 920 வீடு களும், தெல்லிப்பழையில் 850 வீடுக ளும், சாவகச்சேரியில் ஆயிரத்து 652 வீடுகளும் கரவெட்டியில் 30 வீடுகளும், பருத்தித்துறையில் 754 வீடுகளும், மரு தங்கேணியில் 213 வீடுகளும் பாதிக்கப் பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டு அதற் குரிய நிதியும் பெறப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (அ-ம)

## ஒருபுறம்...

மீறிய மீன்பிடி அதிகரித்துள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வடமராட்சிக் கடற்பரப்பில் கடந்த இரண்டு தினங்களாக ஏராளமான இழுவைப் படகுகள் அத்துமீறிய மீன்பிடி யில் ஈடுபட்டு வருகின்றன. கட்டைக்காடு முதல் காங்கேசன்துறை வரையான கடற்பரப்பில் அவற்றின் நடமாட்டத்தை மிகவும் சாதாரணமாக அவதானிக்க முடிந்ததாக வடமராட்சி மீனவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கை யால், யாழ்ப்பாண மீனவர்களின் ஏராள மான வலைகள் மற்றும் மீன்பிடி உபகர ணங்கள் என்பனவும் சேதமடைந்துள் ளன. அத்துடன், அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்டவர்களுடன் வடமராட்சி மீனவர் கள் முரண்பட்டதுடன், இலங்கைக் கடற் பரப்புக்குள் ஊடுருவிய படகுகளை அவர்கள் வீடியோவாகவும் ஒளிப்படமாக வும் பதிவு செய்துள்ளனர்.

டித்வா புயலால் ஏற்பட்ட பேரழிவுகளில் இருந்து இலங்கை மீள்வதற்காக இந் தியா கணிசமான உதவிகளை வழங்கி வருகின்றது. இவ்வாறான நிலையி லேயே, தம்மைக் கைதுசெய்ய மாட்டார் கள் என்ற எண்ணத்தில் இந்திய மீனவர் கள் ஊடுருவுகின்றனர் என்று வடமராட்சி மீனவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ள னர். (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 478 கிலோமீற்றர் ரயில் தடங்களே பயன்படுத்தக்கூடிய நிலையில்



## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ.5**

**இலங்கையில் உள்ள ஆயிரத்து 593 கிலோமீற்றர் ரயில் வலையமைப்பில் 478 கிலோமீற்றர் மட்டுமே தற்போது பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளது என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் ஜெனரல் பி.கே.பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது பல மாவட்டங்களில் போக்குவரத்து, விவசாயம், மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு ஆகியவற்றை இயற்கைப் பேரிடர் கடுமையாகப் பாதித்துள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் நோயாளிகள் தவறவிட்ட மருத்துவ வருகைகள், சிகிச்சை அமர்வுகள் மற்றும் மருத்துவ பரிசோதனைகளை மறுசீரமைக்க வேண்டும் என்றும், நிலைமைகள் மேம்பட்டவுடன் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் சுகாதார அமைச்சு மருததுவமனைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. விவசாய சேவைகள் திணைக்களத்தின் அறிக்கையின்படி, ஆயிரத்து 777 குளங்கள், 483 அணைகள், ஆயிரத்து 936 கால்வாய்கள் மற்றும் 328 விவசாய சாலைகள் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 265 ஏக்கர் விளைநிலங்கள் மற்றும் 305 சிறு நீர்ப்பாசனக் கால்வாய்களும் அழிக்கப்பட்டுள்ளன. வீதி அபிவிருத்தி அதிகார சபை தடைப்பட்ட 246 வீதிகளை மீளவும் திறந்துள்ளது. ஆயினும் நாடு முழுவதும் 22 பாலங்கள் அழிவடைந்துள்ளன. ஊவா மாகாணத்தில் ஆறு பாலங்கள், வடக்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களில் தலா நான்கு பாலங்கள், மேற்கு மாகாணத்தில் மூன்று பாலங்கள், மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் தலா இரண்டு பாலங்கள் மற்றும் வடமத்திய மாகாணத்தில் ஒரு பாலமும் சேதமடைந்துள்ளன. தொலைத்தொடர்பு மீட்பு நடவடிக்கை 91 சதவீதமாக உள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் மறுசீரமைப்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பாதிக்கப்பட்ட 16 ஆயிரத்து 178 மின் துணை மின் நிலையங்களில் 11 ஆயிரத்து 315 மீண்டும் இயக்கப்பட்ட பின்னர், பாதிக்கப்பட்ட 35 இலட்சத்து 31 ஆயிரத்து 841 இணைப்புகளில் 72 சதவீதமான 25 இலட்சத்து 26 ஆயிரத்து 264 நுகர்வோருக்கு மின்சாரம் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது-என்றார். (ஏ-இ)

## கண்டி மாவட்டத்தில் அதிக உயிரிழப்புகள்

கண்டி, டிசெ.5

நாடு முழுவதும் ஏற்பட்ட பேரிடர் காரணமாக கண்டி மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான உயிரிழப்புகள் மற்றும் காணாமல் போனோர் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று வரை கண்டி மாவட்டத்தில் 185 பேர் உயிரிழந்துள்ளதுடன், 229 பேர் காணாமற்போயுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை 32,987 குடும்பங்களைச் சேர்ந்த 1,05,427 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக, 20,000 குடும்பங்களைச் சேர்ந்த 67,921 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

8,471 குடும்பங்களைச் சேர்ந்த 29,257 பேர் 319 பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பேரிடர் காரணமாக கண்டி மாவட்டத்தில், 1259 வீடுகள் முற்றிலுமாக அழிவடைந்துள்ளன. மேலும் 10,014 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. (ச-இ)

## வட்டியற்ற மாணவர் கடன் விண்ணப்பகாலம் நீடிப்பு!

கொழும்பு, டிசெ. 5

வட்டி அற்ற மாணவர் கடன் திட்டத்தின் 10 ஆவது கட்ட விண்ணப்பங்களை கோரும் கால எல்லை எதிர்வரும் டிசெம்பர் 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த விண்ணப்பங்களைக் கோரும் கால எல்லை எதிர்வரும் 30 திகதிவரை நிர்ணயிக்கப்பட்டிருந்தனர்.

ஆயினும் ஏற்பட்ட அனர்த்த நிலை காரணமாக இந்தக் கடன் திட்டத்துக்கான விண்ணப்பங்களைக் கோரும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த வட்டி அற்ற மாணவர் கடன் திட்டத்துக்காக விண்ணப்பித்தலை www.studentloans.mohe.gov.lk என்ற இணையத்தளத்துக்குச் சென்று இணைய வழியில் மேற்கொள்ள முடியும். (ச)

## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், டிசெ.5

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல்10.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் ஆசிரியரும், சைவப் புலவருமான திருமதி.சசிலேகா ஜெயராஜன் கலந்து கொண்டு ஆன்மீகச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (ச-66)

## 38 எரிபொருள் நிலையங்கள் வெள்ளப்பேரிடரால் சேதம்

இலங்கையில் நிலவிய கடுமையான வெள்ளப்பெருக்குக் காரணமாக நாடு முழுவதும் சுமார் 38 எரிபொருள் நிரப்புநிலையங்கள் சேதமடைந்துள்ளதாக எரிசக்தி அமைச்சர் குமார ஜயகொடி தெரிவித்துள்ளார்.

சேதமடைந்தவற்றில் சில நிரப்புநிலையங்கள் ஏற்கனவே சீரமைக்கப்பட்டு மீண்டும் செயற்பாட்டுக்கு வந்துவிட்டாலும், இன்னும் 24 எரிபொருள் நிரப்புநிலையங்கள் செயற்பாட்டில் இல்லாமல் மூடப்பட்டுள்ளன. இருப்பினும், எரிபொருள் விநியோகச் சங்கிலியில் எவ்வித பாதிப்பும் ஏற்படாதவாறு பணிகள் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் மானிப்பாய் நவாலியில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- நவாலி அரசடிச் சந்தியிலிருந்து 250m தூரம்
- நவாலி மகா வித்தியாலயம் 250m தூரம்
- நவாலி கொத்துகட்டி வீதியில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி, நன்னீரூற்று
- ஒரு பரப்பின் விலை 15 லட்சம்

**தொடர்பு:- 076 990 3039**
**074 029 2338**

(CS 30851) A

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நவகிரி மெயின் றோட்டுடன் 48 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- சுன்னாக காபற் வீதி முகப்புடன்
- சுன்னாகம் புத்தூர் செல்லும் பிரதான காபற் வீதியில்
- செம்மண்தரை, நிலப்பரப்பு, குடியிருப்புக்கள் சூளவுள்ள பகுதி
- நிலாவரைக் கிணறு 300 மீற்றர்
- கடைகள் அமைப்பதற்கும், வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்
- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- யாழ்ப்பாணம் பஸ் நிலையம் 10 km

**தொடர்பு:- 076 860 2770**
**076 987 8617**

(CS 30852) A

## நிவாரணப் பொருள்களுடன் பாக். விமானப்படை விமானம்

அவசர நிவாரணப் பொருள்கள் மற்றும் விசேட மீட்புக் குழுவினர் அடங்கிய பாகிஸ்தான் விமானப்படையின் விமானம் நேற்று முன்தினம் புதன்கிழமை இலங்கை வந்துள்ளது.

கொழும்பில் உள்ள இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர், இந்த நிவாரணப் பொருள்களை உத்தியோக பூர்வமாக இலங்கைக்கு ஒப்படைத்தார். பாகிஸ்தான் பிரதமர் முகமது ஷெபாஸ் ஷெரீபின் பணிப்புரையின் பேரில் பாகிஸ்தான் இராணுவத்தின் தேடல் மற்றும் மீட்புப் பிரிவைச் சேர்ந்த 47 உறுப்பினர்களும், 6.5 மெட்ரிக் தொன் அத்தியாவசிய உபகரணங்களும் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

கூடாரங்கள், போர்வைகள், உயிர்காப்பு உடைகள், படகுகள், நீர்ப் பம்புகள், விளக்குகள், பாய்கள், நுளம்பு வலைகள், குழந்தைகளுக்கான பால்மா, பதப்படுத்தப்பட்ட உணவுகள் மற்றும் அத்தியாவசிய மருந்துகள் இந்த நிவாரணப் பொருள்களில் அடங்குகின்றன. (ஏ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] 36 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.